# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

**தரம் 13 (2019)** **கணக்கீடு 33-T-1** **இரண்டு மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள்:-**
சகல வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்கவும். ஓவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும். மொத்த புள்ளிகள் 100 ஆகும்.

- **இலக்கம் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையினைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1) பின்வருவனவற்றில் கணக்கீட்டின் பிரதான நோக்கமாகக் காணப்படுவது?
   1) முகாமையாளர் தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான கணக்கீட்டு தகவலை வழங்குதல்.
   2) நிதி சார் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல்.
   3) வெளியக தரப்பினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொருளாதார தகவல்களை வழங்குதல்.
   4) முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான நிதி சார் தகவல்களை வழங்குதல்.
   5) அக்கறை செலுத்தும் பிரவினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான பொருளாதார தகவல்களை வழங்குதல்.

(…….)

2) கணக்கீட்டு அலகு தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்களும் அவர்கள் அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்களும் கீழேதரப்பட்டுள்ளன.

| பிரிவினர் | அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் |
|---|---|
| உரிமையாளர் | A தேசிய பொருளாதாரத்திற்கான நிதிப் பங்களிப்பினை வழங்குதல் |
| ஊழியர் | B வெற்றிகரமான வணிகச் செயற்பாட்டிற்கான தீர்மானங்களை மேற்கொள்ளல் |
| வாடிக்கையாளர் | C சம்பள உயர்வுகள் மற்றும் தொழில் நிலைத்திருக்கும் தன்மை என்பவற்றினை ஆராய்தல் |
| அரசு | D பொருட்கள் சேவைகளை தொடர்ச்சியாக கொள்வனவுசெய்யும் இயலுமையை உறுதிப்படுத்தல் |
| முகாமையாளர் | E இலாபத்தன்மை மற்றும் முதலீட்டுக்கான பாதுகாப்பு என்பனவற்றைப் பரீட்சித்தல் |

மேலே தரப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் வணிக அலகின் மீது அக்கறை காட்டுவதற்கான காரணங்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?

1) B,A,D,E,C
2) E,C,D,A,B
3) E,C,D,A,B
4) B,C,E,A,D
5) E,C,D,B,A

(………)

3) சுவேதிகா வணிகத்தின் 2019.01.01 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கடன் கொள்வனவு | ரூபா 80 000 |
| கொள்வனவுத் திரும்பல் | ரூபா 6 000 |

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

01. சொத்து அதிகரித்தல் ரூ. 74 000 – பொறுப்பு குறைவடைதல் ரூ. 74 000
02. சொத்து அதிகரித்தல் ரூ. 74 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 74 000
03. சொத்து அதிகரித்தல் ரூ. 80 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 80 000
04. சொத்து குறைவடைதல் ரூ. 80 000 – பொறுப்பு அதிகரித்தல் ரூ. 80 000
05. உரிமை அதிகரித்தல் ரூ. 80 000 – சொத்து அதிகரித்தல் ரூ. 80 000

(……..)

4) பின்வருவன நிதிக் கணக்கீட்டின் தொழிற்பாடுகள் ஆகும்.

A. மூலப் பதிவேடுகளில் பதிவு செய்தல்
B. கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுதல்
C. பரீட்சை மீதி தயாரித்தல்
D. பேரேடுகளில் பதிவு செய்தல்
E. மூல ஆவணங்கள் தயாரித்தல்

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சரியான ஒழுங்கு வரிசை எது?

01. E,B,A,D,C 02. A,B,E,D,C 03. B,E,A,D,C 04. E,A,B,D,C 05. A,D,B,E,C

(………)

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 05, 06 வினாக்களுக்கு விடை தருக.**

கணக்கீட்டு எண்ணக்கருச் சட்டத்தின் கணக்கீட்டு தகவல்களின் பண்புசார் குணாதிசயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. ஒப்பிடக் கூடிய தன்மை
B. காலத்திற்குப் பொருத்தமான தன்மை
C. பொருத்தமான தன்மை
D. நம்பகத் தன்மை கொண்ட பிரதிநிதித்துவம்
E. விளங்கிக் கொள்ளக் கூடிய தன்மை
F. சான்றுப்படுத்தக் கூடிய தன்மை

5) கணக்கீட்டுத் தகவல்களின் அடிப்படைப் பண்புசார் குணாதிசயங்களாகக் கருதப்படுபவை எவை?

01. A, B 02. B, D 03. A, F 04. D, E 05. C,D (…….)

6) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் நடைமுறை விலையில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன எனின் இச் செயற்பாட்டினை அனுசரித்து செல்லும், மீறப்படும் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் குணதிசயங்களாகக் காணப்படுபவை எவை?

| | அனுசரித்துச் செல்லும் பண்புகள் | மீறப்படும் பண்புகள் |
|---|---|---|
| 01. | ஒப்பிடக் கூடியதன்மை | காலத்திற்குப் பொருத்தமான தன்மை |
| 02. | காலத்திற்கு பொருத்தமான தன்மை | நம்பகத் தன்மையான பிரதிநிதித்துவம் |
| 03. | விளங்கிக் கொள்ளக் கூடிய தன்மை | சான்றுப்படுத்தக் கூடிய தன்மை |
| 04. | பொருத்தப்பாடான தன்மை | சான்றுப்படுத்தக் கூடிய தன்மை |
| 05. | நம்பகத் தன்மையான பிரதிநிதித்துவம் | ஒப்பிடக் கூடிய தன்மை |

(……..)

7) வரையறுக்கப்பட்ட கமலினி வணிகத்தின் விற்பனைப் பட்டியலிலிருந்து (இன்வொய்ஸ்) பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்று கீழே காணப்படுகின்றன.

| திகதி | வழங்குநர் | பெறுமதி (ரூ 000) |
|---|---|---|
| 2019.01.05 | நர்மதா வியாபாரம்<br>கழிவு 10% | 800<br>(80) |
| | | 720 |
| நிபந்தனை : ஒரு மாதத்தினுள் பணம் செலுத்தப்படுமாயின் 10% கழிவு கிடைக்கும் | | |

இக் கொடுக்கல் வாங்கலுக்குரிய பணம் 2019.01.30 இல் கிடைத்தது. கழிவினைப் பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு எது?

| | | வரவு (ரூபா) | | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | கொடுத்த கழிவுக்கணக்கு | 72 000 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 72 000 |
| 2. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 72 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 72 000 |
| 3. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 80 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 40 000 |
| 4. | கொடுத்த கழிவுக் கணக்கு | 152 000 | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 152 000 |
| 5. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 152 000 | பெற்ற கழிவுக் கணக்கு | 152 000 |

(…….)

8) சந்துரு வணிகம் தனது சில்லறைச் செலவுகளுக்காக வசக்கட்டு முறையிலான சில்லறைக் காசுக் கொடுப்பனவு முறையினைப் பயன்படுத்துகின்றது. மாதாந்த சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி ரூபா 6000 ஆகும். வசக்கட்டானது மாதத்தின் தொடக்கத் திகதியில் மீள் நிரப்பப்பட்டுவருவதுடன் 2019 ஜனவரி, பெப்ரவரி இரண்டு மாதங்களுக்குமாக வெவ்வேறாக பிரதம காசாளரினால் சில்லறைக் காசாளருக்கு மீள் நிரப்பிய மொத்தத் தொகை ரூபா 8 200 ஆகும். 2019.02.01 இல் மீள் நிரம்பலுக்கு முன்னர் சில்லறைக் காசாளரின் கையில் இருந்த மீதி ரூபா 800 ஆகும்.

2019.01.01இல் மீள்நிரம்பலுக்கு முன்னர் சில்லறைக் காசாளரிடம் காணப்பட்ட மீதியானது,

1) ரூபா 1 800 ஆகும்.
2) ரூபா 2 400 ஆகும்.
3) ரூபா 4 400 ஆகும்.
4) ரூபா 2 000 ஆகும்.
5) ரூபா 3 000 ஆகும்.

(……..)

9) சிவன் வணிகத்தின் 2019.03.31 இல் தயாரித்த பரீட்சை மீதியின் மொத்தமானது சமப்படாமையினால் வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதவு செய்யப்பட்டு, வரைபு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு தேறிய இலாபமாக ரூபா 300 000 கணிப்பிடப்பட்டதுடன் தொங்கல் கணக்கின் மீதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது பின்வரும் வழுக்களும் விடுபடுதல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

* உட்திரும்பல் ரூபா 20 000 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.
* வாடகைக் கொடுப்பனவு ரூபா 8 000 வாடகைக் கணக்கு காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு இரண்டிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது.
* பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூபா 5 000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சரியான தேறிய இலாபத்தையும், தொங்கல் கணக்கில் காணப்பட்ட மீதியையும் முறையாகக் காட்டும் விடை எது?

| | சரியான தேறிய இலாபம் (ரூபா) | தொங்கல் கணக்கின் மீதி (ரூபா) |
|---|---|---|
| 1. | 264 000 | 26 000 (செலவு) |
| 2. | 264 000 | 26 000 (வரவு) |
| 3. | 284 000 | 20 000 (செலவு) |
| 4. | 320 000 | 36 000 (வரவு) |
| 5. | 336 000 | 36 000 (செலவு) |

(……..)

10) டேவிட் வணிகத்தின் 2019.03.31 இல் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 100 000 ஆகக் காணப்பட்டது. அத்திகதியில் கடன்கொடுநர் மீதிப்பட்டியலின் மொத்தமானது கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கன் மீதியுடன் பின்வரும் காரணங்களினால் சமப்படவில்லை.

* காசோலையொன்று மறுக்கப்பட்டமை காரணமாக நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 5 000 கழிவினை இரத்துச் செய்வதற்கான பதிவு கடன் கொடுநர் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது.
* கிடைத்த கழிவு ரூபா 15 000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1 500 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
* ரூபா 10 000 கொள்வனவுப் பட்டியலொன்று குறித்த கடன்கொடுநர் கணக்கில் ரூபா 1 000 எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

2019.03.31 இல் திருத்தப்பட்ட கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் திருத்தப்பட முன்னர் கடன்கொடுநர் மீதிப்பட்டியலில் மொத்தம் என்பவற்றை முறையாகக் காட்டும் விடை எது?

1) ரூபா 67 500, ரூபா 67 500 ஆகும்.
2) ரூபா 67 500, ரூபா 86 500 ஆகும்.
3) ரூபா 86 500, ரூபா 76 500 ஆகும்.
4) ரூபா 86 500, ரூபா 67 500 ஆகும.
5) ரூபா 113 500, ரூபா 105 500 ஆகும்.

(…….)

11) குத்தகை முறையின் கீழ்கொள்வனவு செய்த மோட்டார் வாகனமொன்றை நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் இனங்காண்பதற்கு அடிப்படையாக அமைகின்ற கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

1) அலகு சார் எண்ணக்கரு
2) தொடர்ந்து செயற்படும் அமைப்பு எண்ணக்கரு
3) தோற்றத்தலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
4) இணைதல் எண்ணக்கரு
5) பண அளவீட்டு எண்ணக்கரு

(…….)

12) பின்வரும் கணக்கீட்டுச் சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.

A. இயந்திரம் ஒன்றின் நடைமுறைவிலைப் பெறுமதி வெளிப்படுத்தப்படுதல்
B. சரக்கிருப்புக்கள் FIFO முறையில் மதிப்பிடப்படுதல்
C. சரக்கிருப்புக்கள் நடைமுறை சந்தை விலையில் மதிப்பிடப்படுதல்
D. நிலத்தின் பெறுமதி கொள்வனவு விலையில் மதிப்பிடப்படுதல்

கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் அறிக்கைப்படுத்தும் போது வரலாற்குக் கிரய எண்ணக்கருவிலிருந்து விலகியிருக்க கூடிய சந்தர்ப்பமொன்றாகக் இனங்காணக் கூடியது/கூடியவை

1) A, C 2) B,D 3) A,B 4) B,C 5) A,D

(…….)

13) நிமால் வணிகமானது மோட்டார் கார்களை வாடகைக்கு வழங்கி வருமானமீட்டி வருகின்றது. 2019.03.31 இலும் 2018.04.01 இலும் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு.

| | **2019.03.31 இல் (ரூபா)** | **2018.04.01 இல் (ரூபா)** |
|---|---|---|
| முற்பண வாடகை வருமானம் | 120 000 | 240 000 |
| வருமதி வாடகை வருமானம் | 420 000 | 380 000 |

2019.03.31 இல் முடிவடையும் வருடத்தினுள் மொத்த பெற்ற வாடகை ரூபா 1 300 000 ஆகும்.
2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்குரிய வாடகை வருமானத்தின் பெறுமதி

1) ரூபா 1160 000 ஆகும்.
2) ரூபா 1140 000 ஆகும்
3) ரூபா 1240 000 ஆகும்
4) ரூபா 1300 000 ஆகும்
5) ரூபா 1460 000 ஆகும்

(…….)

14) வரையறுக்கப்பட்ட யமுனா கம்பனியின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா 000 |
|---|---|
| விற்பனைகள் | 5 000 |
| விற்பனைத் திரும்பல் | 200 |
| 2018.04.01இல் கடன்பட்டோர் மீதி | 450 |
| 2019.03.31இல் கடன்பட்டோர் மீதி | 650 |

விற்பனைகள் அனைத்தும் விற்பனை விலையில் 20% இலாபத்தில் இடம்பெற்றுள்ளன. 60% விற்பனைகள் கடனுக்கு மேற்கொள்ளப்பட்டவையாகும்.

2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய மொத்த இலாபமும் கடன்பட்டோரிடம் பெற்ற காசும் முறையே

1) ரூபா 960 000, ரூபா 1600 000
2) ரூபா 960 000, ரூபா 2600 000
3) ரூபா 960 000, ரூபா 3000 000
4) ரூபா 1000 000, ரூபா 3000 000
5) ரூபா 1000 000, ரூபா 2600 000

(……..)

15) விமல் கம்பனி கிரயத்தில் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. 31.03.2019 இல் நிதியாண்டிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ000 |
|---|---|
| ஆரம்ப மூலப் பொருள் இருப்பு | 300 |
| இறுதி மூலப்பொருள் இருப்பு | 250 |
| மூலப்பொருள் கொள்வனவு | 1 200 |
| தீர்வைவரியும், உட்சுமைக்கூலியும் | 150 |
| இறுதிக் குறைவேலை உற்பத்திக் கிரயத்தில் | 200 |
| நேர் கூலி | 1 400 |

உற்பத்தி மேந்தலைகள் மூலக் கிரயத்தின் 40%

2019.03.31 இல் முடிவடைந்த வருடத்தின் உற்பத்திக் கிரயமும், உற்பத்தி மேந்தலையும் முறையே

1) ரூபா 3720 000, ரூபா 1200 000
2) ரூபா 3720 000, ரூபா 1120 000
3) ரூபா 3920 000, ரூபா 1120 000
4) ரூபா 3920 000, ரூபா 1200 000
5) ரூபா 4120 000, ரூபா 1120 000

(…….)

16) இலாப நோக்கமற்ற வணிகங்கள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் எது பிழையானது?

1) இவ்வணிகத்தில் செலவை விட வருமானம் கூடுதலாகக் காணப்படின் அது மிகையாக இனங்காணப்படும்.
2) இவ்வணிகத்தில் மிகைகளின் மூலம் கட்டியெழுப்பப்படுகின்ற நிதியானது உரிமையின் பகுதியொன்றாகும்.
3) இவ்வணிகத்தில் நிலுவை அங்கத்துவத் தொகை சொத்தாக இனங்காணப்படும்
4) இவ்வகையான வணிகங்கள் தமது விசேட தேவைகளுக்காக வேறு நிதிகளைப் பேணிச்செல்ல முடியும்.
5) இவ் வணிகங்களின் தேறிய வருமானங்கள் கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மூலம் இனங்காணப்படும்.

(…….)

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 17,18,19 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.**

கமல், நிமல், விமல் மூவரும் முறையே ரூபா 2000 000 வீதம் மூலதனத்தை ஈடுபடுத்தி பங்குடமை வியாபாரமொன்றை ஆரம்பித்தனர். இத் திகதியில் பங்காளர்களிடையே ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தப்பட வில்லை. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தின் பங்குடமை 600 000 இலாபத்தை உழைத்ததுடன் ஒவ்வொரு பங்காளரும் தமது இலாபப் பங்கிலிருந்து ரூபா 100 000 வீதம் காசாக எடுத்துக் கொண்டனர்.

01.04.2018 இல் இருந்து பங்காளர்கள் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைக்கு அமைய 31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டில் உழைக்கப்பட்ட இலாப நட்டங்கள் பகிரப்பட்டதன் பின்னர் பங்காளர் நடைமுறைக் கணக்கு வருமாறு.

ரூபா 000

| விபரம் | கமல் | நிமல் | விமல் | விபரம் | கமல் | நிமல் | விமல் |
|---|---|---|---|---|---|---|---|
| பற்று | 200 | 100 | 100 | சம்பளம் | 600 | 600 | 300 |
| மீதி சென்றது | 960 | 1060 | 580 | மூலதன வட்டி (10%) | 200 | 200 | 200 |
| | | | | இலாபம் | 360 | 360 | 180 |
| | 1160 | 1160 | 680 | | 1160 | 1160 | 680 |

17) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை உழைத்த இலாபம் எவ்வளவு?

1) ரூபா 3000 000 2) ரூபா 2600 000 3) ரூபா 2640 000
4) ரூபா 3200 000 5) ரூபா 900 000

(…….)

18) பங்காளர் ஈடுபடுத்திய மூலதனம் நிலையாக பேணப்படுமாயின் 31.03.2019இல் உள்ளவாறு காணப்பட வேண்டிய நடைமுறைக் கணக்கு மீதி?

1) ரூபா 2600 000 2) ரூபா 2900 000 3) ரூபா 3000 000
4) ரூபா 3600 000 5) ரூபா 3300 000

(…….)

19) 31.03.2019 இல் உள்ளவாறு பங்குடமையின் மொத்த உரிமையாண்மை எவ்வளவு?

1) ரூபா 6000 000
2) ரூபா 8600 000
3) ரூபா 8900 000
4) ரூபா 9000 000
5) ரூபா 9300 000

(…….)

20) LKAS 8 (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கல்) நியமத்திற்கேற்ப பின்வருவனவற்றுள் கணக்கீட்டு மதிப்பீடு/மதிப்பீடுகளின் மாற்றமாகக் கருதக்கூடியவை எவை?

A – இயந்திரம் ஒன்றின் பயன்பாட்டு ஆயட்காலம் 10 வருடங்களிலிருந்து 12 வருடங்களாக மதிப்பிடப்பட்டது.

B - இருப்பின் கிரயம் ரூபா 800 000 ஆகக் காணப்பட்ட போதிலும் அதன் தேறிய நிகரப் பெறுமதி ரூபா 500 000 என மதிப்பிடப்பட்டது.

C – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைத் தேய்விடும் முறை நேர் கோட்டு முறையிலிருந்து ஒடுங்குபாக மீதி முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

1. A மட்டும்
2. A யும் Cயும் மட்டும்
3. A,B,C ஆகிய சகலதும்
4. A யும் B யும் மட்டும்
5. B யும் C யும் மட்டும்

(……..)

21) LKAS 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) நியமத்திற்கேற்ப செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள், நிதி நடவடிக்கைள் என்பவற்றிற்குரிய உருப்படிகளை முறையாகக் காட்டும் விடை எது?

1) கடன்கொடுத்தோருக்கு காசு செலுத்துதல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், வங்கிக் கடன்பெறல்.
2) கடன்பட்டோரிடமிருந்து காசு கிடைத்தல், பங்குகளைக் கொள்வனவு செய்தல், பங்கிலாபம் கிடைத்தல்.
3) வட்டி வருமானம் கிடைத்தல், காசு விற்பனை, வங்கியிலிருந்து கடன் எடுத்தல்.
4) காசுக்கொள்வனவு ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனை, கடன் விற்பனை
5) செயற்பாட்டுச் செலவுகளைச் செலுத்துதல், வங்கிக் கட்டளைச் செலுத்துதல் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு

(……)

22) வரையறுக்கப்பட்ட கபில்தேவ் பொதுக் கம்பனியின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் 2019.06.15 இல் அங்கீகரிக்கப்பட்டது. 2019.03.31 தொடக்கம் 2019.06.15 வரையான காலப்பகுதியினுள் பின்வரும் நிகழ்வுகள் கம்பனியில் இடம்பெற்றிருந்தன.

A. 2019.05.10 இல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 2019.03.31 நிறுவனத்தில் காணப்பட்ட முக்கியமான இயந்திரமொன்று அழிவுக்குட்பட்டு ரூபா 500 000 நட்டம் ஏற்பட்டது.

B. 2019.02.28 இல் இடம்பெற்ற கடன் விற்பனையின் காரணமாக உருவான ரூபா 50 000 கடன்பட்டோர் 2019.04.05 இல் முறிவடைந்தவராக நீதிமன்றம் அறிவித்தது.

C. ஊழியர் ஒருவரினால் 2019.03.20 இல் நிறுவனத்திற்கு எதிராக வைக்கப்பபட்ட வழக்கு தொடர்பில் நட்டஈடாக ரூபா 100 000 வை நிறுவனம் செலுத்த வேண்டும் என 2019.04.20 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

D. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கு சாதாரண பங்காளர்களுக்கு ரூபா 400 000 வை இறுதிப்பங்கிலாபமாக 2019.06.10 இல் பிரகடனப்படுத்தியது.

LKAS 10 (அறிக்கைப்படுத்தப்பட்ட நிதியாண்டுக்குப் பின்னரான நிகழ்வுகள்) நியமத்திற்கேற்ப 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டிய நிகழ்வுகள்/நிகழ்வு எது?

1) A மட்டும்
2) B மட்டும்
3) A யும் B யும் மட்டும்
4) B யும் C யும் மட்டும்
5) C யும் D யும் மட்டும்

23) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) க்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வணிகமாகிய வரையறுக்கப்பட்ட கனகம் கம்பனி 2017.04.01 இல் 15% பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக ரூபா 1380 000 பெறுமதியான இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்திருந்தது. இவ்வியந்திரத்தின் இழிவுப் பெறுமதி ரூபா 100 000 ஆகவும், பயன்படு ஆயுட்காலம் 10 வருடங்களாகவும் மதிப்பீடு செய்யப்பட்டது.
LKAS 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணம்) நியமத்திற்கேற்ப இவ்வியந்திரத்தின் 2019.03.31 தேறிய பெறுமதி எவ்வளவு?

1) ரூபா 1 380 000 ஆகும்.
2) ரூபா 1 200 000 ஆகும்.
3) ரூபா 1 100 00 ஆகும்.
4) ரூபா 1 020 000 ஆகும்.
5) ரூபா 980 000 ஆகும்.

(…….)

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24,25,26 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.**

வரையறுக்கப்பட்ட தனுசன் பொதுக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் சில பின்வருமாறு

| | **2019.03.31 ஆம் திகதி (ரூபா 000)** | **2018.03.31 ஆம்திகதி (ரூபா 000)** |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | 6 000 | 4 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | 800 | |
| பொது ஒதுக்கம் | 1 500 | 1 200 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 3 500 | 2 300 |

**பிற பொருத்தமான தகவல்கள்**

1. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான வரி ரூபா 600 000 ஆக மதிப்பிடப்பட்டது. 2018.03.31இல் காணப்பட்ட வருமான வரிப் பொறுப்பு ரூபா 400 000 ஆனது ரூபா 250 000 ஆக இவ் வருடத்தில் இணங்கிக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.
2. 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்திய பங்கிலாபம் ரூபா 500 000 ஆகக் காணப்பட்டதுடன் வருடத்தினுள் நிறுத்தி வைத்த உழைப்பிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு ஒரு தொகை மாற்றப்பட்டுள்ளது.
3. கம்பனிக்கு சொந்தமான காணி 2019.03.31 இல் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் மீள்மதிப்பீட்டின் போது ரூபா 500 000 குறைவொன்று அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. இவ் வருடத்திற்கான இது தொடர்பான சீராக்கங்கள் அனைத்தும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. இவ் வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 500 000 ஆகவும், தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 800 000 ஆகும்

24) 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் எவ்வளவு?

1) ரூபா 2 000 000
2) ரூபா 2 350 000
3) ரூபா 2 200 000
4) ரூபா 2 450 000
5) ரூபா 2 300 000

(…….)

25) 2019.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான கம்பனியின் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு?

1) ரூபா 200 000
2) ரூபா 800 000
3) ரூபா 300 000
4) ரூபா 900 000
5) ரூபா 500 000

(…….)

26) 2019.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

1) ரூபா 2450 000
2) ரூபா 1450 000
3) ரூபா 1950 000
4) ரூபா 1200 000
5) ரூபா 1650 000

(……)

27) வரையறுத்த சிங்கராசா கம்பனியின் 2019.03.31இல் முடிவடைந்த வருடம் தொடர்பான தகவல்கள் வருமாறு

கடன் விற்பனை ரூபா 400 000
சரக்கிருப்பு புரள்வு விகிதம் 4 தடவைகள்
கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 3 மாதங்கள்
மொத்த இலாப வீதம் 25%

கம்பனியின் சராசரி கையிருப்பும், சராசரி கடன்பட்டோர் தொகையும் முறையே எவை?

1) ரூபா 75 000, ரூபா 100 000
2) ரூபா 75 000, ரூபா 200 000
3) ரூபா 60 000, ரூபா 100 000
4) ரூபா 30 000, ரூபா 100 000
5) ரூபா 7 500, ரூபா 10 000

(……)

28) வணிகமொன்று பொருள் கட்டுப்பாடு தொடர்பில் பயன்படுத்துகின்ற ஆவணங்கள் தொடர்பிலான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – உற்பத்தி பிரிவினால் களஞ்சியச்சாலைக்கு பொருட்கள் திருப்பியனுப்புவதற்காக வரவுத்தாள் பயன்படுத்தப்படும்

B – வழங்குநர்களிடமிருந்து கிடைக்கின்ற பொருட்களை பரிட்சித்துப் பொறுப்பேற்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஆவணம் பொருள் பெறுவனவுப் பத்திரமாகும்.

C – உற்பத்திப்பிரிவினால் மூலப்பொருட்களைக் கேட்டு களஞ்சியச்சாலைக்கு வழங்கப்படுகின்ற ஆவணம்பொருள் வேண்டுகோள்பத்திரமாகும்.

D – களஞ்சியச்சாலையினால் பொருட்களை கொள்வனவு செய்யுமாறு கொள்வனவுப் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற ஆவணம் கொள்வனவுக் கட்டளையாகும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்றுக்களை எவ்விடை காட்டுகின்றது.

1) A, B மாத்திரம்
2) A,C மாத்திரம்
3) A,B,C,D மாத்திரம்
4) B,C மாத்திரம்
5) A,B,C மாத்திரம்

(…….)

29) பின்வரும் தகவல்கள் M1 எனப்படுகின்ற மூலப்பொருள் உருப்படியொன்றுடன் தொடர்புடையதாகும்.

வாரமொன்றின் சராசரிப் பாவனை 60 Kg
வாரமொன்றின் இழிவுப் பாவனை 20 Kg
மறு கட்டளை அளவு 240 Kg
முதன்மைக் காலம் 4 - 8 வாரங்கள்

M1 மூலப்பொருள் உருப்படியின் உச்ச, இழிவு இருப்பு மட்டங்களை முறையாகக் காட்டும் விடை எது?

1) 480 Kg, 240 Kg
2) 640 Kg, 240 Kg
3) 640 Kg, 480 Kg
4) 240 Kg, 120 Kg
5) 960 Kg, 40 Kg

(…….)

30) உற்பத்திக் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உருப்படியொன்று தொடர்பிலான தகவல்களில் சில பின்வருமாறு

மறுகட்டளைத் தொகை 200 அலகுகள்
வருடத்திற்கான கட்டளை எண்ணிக்கை 40
கட்டளை ஒன்றின் செலவு ரூபா 12.50

அலகொன்றுக்கான பராமரப்புச் செலவு எவ்வளவு?

1) ரூபா 100 2) ரூபா 12.50 3) ரூபா 10 4) ரூபா 5 5) ரூபா 22.50

(……)

**இலக்கம் 31 வரையான 50 வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31) பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் நிதிக்கூற்றுக்களில் எம் மூலங்களுக்குட்பட்டது என்பதைத் குறிப்பிடுக.

| | கணக்கு | மூலங்கள் |
|---|---|---|
| 1. | முற்பணமாகப் பெற்ற வாடகை வருமானம் | ............................... |
| 2. | வருமதியாக உள்ள அங்கத்துவச் சந்தா | ............................... |
| 3. | கடன்பட்டோர் நட்டங்களுக்கான ஏற்பாடு | ............................... |
| 4. | ஊழியர் நட்டஈட்டுக்கடன் ஏற்பாடு | ............................... |

32) தசான் வணிகத்தின் 2019 ஜனவரி மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பேடு கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட்டியல் இலக்கம் | வாடிக்கையாளர் | பெறுமதி ரூ.000 | VAT | மொத்தப் பெறுமதி ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| 01/10 | 1002 | நிமால் | 1500 | 225 | 1725 |
| 01/25 | 1003 | கமல் | 1200 | 180 | 1380 |
| 01/31 | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | 2700 | 405 | 3105 |

ஜனவரி மாதத்தில் விற்பனை நாட்குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு மாற்றியதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதிக் காட்டுக.

**பொது நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு ரூ 000 | செலவு ரூ 000 |
|---|---|---|---|
| ................ | ........................................................................................ | ................ | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |

33) அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வரையறுத்த பினிஸ் கம்பனியின் வழமையான இலாப வீதம் கிரயத்தில் 40% ஆகும். 2019.03.31இல் காணப்பட்ட சரக்கிருப்புக்களின் கிரயம் ரூபா 2500 000 ஆகும். இவற்றில் ரூபா 300 000 கிரயமானவை பழமையடைந்தவையாகக் காணப்பட்டதனால் வழமையான விற்பனை விலையிலிருந்து 40% கழிவினை வழங்குவதன் மூலம் ரூபா 80 000 விளம்பரச் செலவில் விற்பனை செய்யமுடியும்.

அ) 2019.03.31 இல் இருப்பின் தேறிய நிகரப் பெறுமதியைக் கணிக்க. ரூ...........................

ஆ) இருப்பினைப் பதிவழித்தலைப் கணக்குகளில் பதிவு செய்வதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினை எழுதிக் காட்டுக.

பொது நாட்குறிப்பேடு

| திகதி | விபரம் | வரவு ரூ மில்லியன் | செலவு ரூ மில்லியன் |
|---|---|---|---|
| ................ | ........................................................................................ | ............... | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |
| | ........................................................................................ | ................ | ................ |

34) கமல் வியாபாரத்தின் 2019 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | 31.12.2018 இல் | 31.01.2019 இல் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மாற்றப்படாத காசோலைகள் | 50 000 | 62 000 |
| வசூலிக்கப்படாத காசோலைகள் | 48 000 | 53 000 |

2019 ஜனவரி மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தம் ரூபா 1200 000 ஆகவும் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட காசோலைகளின் மொத்தம் ரூபா 950 000 ஆகவும் காணப்பட்டது.

2019 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றில் வங்கிக் கட்டணம் ரூபா 4000, காசோலை புத்தகக் கட்டணம் ரூபா 2000 என்பன அறவிடப்பட்டுள்ளது.

2019.01.01இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 105 000 ஆகும்.

1) 2019 ஜனவரி மாதத்திற்கான பின்வருவனவற்றைக் காண்க
   அ). மாற்றப்பட்ட காசோலைகளின் பெறுமதி : ரூபா ...........................
   ஆ). வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி : ரூபா .......................
2) 2019.01.31இல் வங்கிக் கூற்றின் மீதி : ரூபா ......................................

35) பிரவீன் வணிகத்தின் 2018.12.31இல் பரீட்சை மீதி சமப்படாமையினால் தொங்கல் கணக்கொன்று ஏற்படுத்தப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1) பெறுவனவு நாளேட்டுக் கழிவு நிரலின் மொத்தத் தொகை ரூபா 25 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, கொடுத்த கழிவுக் கணக்கு அகியவற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
2) கொள்வனவுத் திரும்பல் ரூபா 30 000 கொள்வனவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
3) பெற்ற வாடகைக் கணக்கின் மீதி ரூபா 12 000 பரீட்சை மீதியில் கொடுத்த வாடகையாக நிரல்படுத்தப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்ட வழுக்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைக் காண்க.

1) பரீட்சை மீதியில் ஏற்படுத்தப்பட்ட தொங்கல் கணக்கின் மீதி : ரூபா ............ வரவு/செலவு (பொருத்தமற்றதை வெட்டிவிடுக)
2) வழுக்களை திருத்தம் செய்வதன் மூலம் தேறிய இலாபத்தில் ஏற்படக் கூடிய விளைவு யாது? ............................

36) பிரணவன் விணிகத்தின் 31.03.2019 இல் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 120 000 ஆனது அத் திகதியில் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகளின்

பட்டியல் மீதியின் மொத்தத் தொகையுடன் உடன்படவில்லை. பரிசீலனைகளின் போது பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

1) கடன் விற்பனைப் பட்டியல் தொகை ரூபா 76 000 ஆனது விற்பனை நாளேட்டில் ரூபா 67 000 ஆகப் பதியப்பட்டுள்ளது.
2) கடன்பட்டோர் ஒருவருக்கு அனுமதித்த கழிவு ரூபா 5500 ஆனது கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்கில் ரூபா 550 எனப் பதியப்பட்டுள்ளது
3) பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூபா 3500 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றைக் காண்க.

1) 31.03.2019இல் நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் கடன்பட்டோர் பெறுமானம்:…………

2) திருத்தங்கள் மேற்கொள்வதற்கு முன்னரான கடன்பட்டோர் பேரேட்டு பட்டியல் மீதி : ………………

37) பின்வரும் செயற்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினை எழுதுக.

| இல | செயற்பாடுகள் | பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|---|
| 1 | உரிமையாளரின் வீட்டு வாடகை செலவொன்றாக காட்டப்படாமை | |
| 2 | வருடாந்த பெறுமானத் தேய்வுத் தொகையினை ஒதுக்கீடாக திரட்டி வைத்திருத்தல் | |
| 3 | சொத்து சட்டரீதியாக உடமையாக்கப்படாவிடினும் அதன் மூலமான அனுகூலங்கள் வந்து சேருவதனால் அதனை சொத்தொன்றாக வெளிப்படுத்தல் | |
| 4 | உழைக்கப்படாத வருமானங்களை பொறுப்பொன்றாக வெளிப்படுத்தல் | |

38) சின்னா வணிகத்தின் 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு

| | ரூபா 000 |
|---|---|
| விற்பனைக் கிரயம் | 4500 |
| 31.03.2019இல் மதிப்பிடப்பட்ட சரக்கிருப்பு | 1000 |

விற்பனைகள் அனைத்தும் விற்பனை விலையில் 25% இலாபத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

15.02.2019இல் ரூபா 300 000 விற்பனை விலைக்கான சரக்குகள் வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்பனை செய்க அல்லது திருப்பி அனுப்புக என்ற அடிப்படையில் பட்டியலிடப்பட்டன. இதற்கான பதிவுகள்
எவையும் செய்யப்படதிருந்ததுடன் 31.03.2019இல் இவற்றில் 50% மட்டும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக வாடிக்கையாளர் அறிவித்துள்ளார். இவ் விற்பனைக்கான காலம் 15.04.2019இல் முடிவடைகின்றது.

பின்வருவனவற்றைக் காண்க

1) 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை வருமானம் :………………

2) 31.03.2019இல் வெளிப்படுத்தப்படும் சரக்கிருப்பின் பெறுமதி :………………………..

39) தைத்த ஆடைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் கம்பனி ஒன்றின் 31.12.2018இல் முடிவடையும் காலத்திற்கான தகவல்கள் வருமாறு

| | ரூபா |
|---|---|
| துணி கொள்வனவு (1000 மீற்றர்) | 400 000 |
| நேர் கூலி (காசாகக் கொடுத்தது) | 80 000 |
| தொழிற்சாலை மேந்தலைகள் | 40 000 |

பிற பொருத்தமான தகவல்கள்

- ஒரு தைக்கப்பட்ட ஆடைக்கு 2 மீற்றர் துணி பயன்படுத்தப்படுகின்றது.

- 01.01.2018இல் 75 தைத்த ஆடைகள் ரூபா 75000 பெறுமதியில் இருப்பாக காணப்பட்டன. இவை அனைத்தும் இவ் வருடத்தில் விற்பனை செய்யப்பட்டதுடன் இவ் வருடத்தில் விற்பனை செய்யப்பட்ட தைத்த ஆடைகளின் 475 ஆகும்.
- ஆடை ஒன்றினைத் தைப்பதற்கு ரூபா 200 நேர் கூலியாகக் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் காண்க.

1) தைத்த ஆடை ஒன்றின் உற்பத்திக் கிரயம் எவ்வளவு :……………………….

2) 31.12.2018இல் உள்ள தைத்த ஆடை இருப்பின் பெறுமதி எவ்வளவு? ……………………

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 40, 41ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

நன்நெறி விளையாட்டுக் கழகத்தின் 31.03.2018இல் முடிவடைந்த வருடம் தொடர்பான தகவல்கள் வருமாறு:-

- 31.03.2018இல் காணப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை 100 ஆகும். அங்கத்தவர் ஒருவருக்கான காலண்டுச் சந்தா ரூபா 500. இவ் வருடத்தில் 80 அங்கத்தவரிடமிருந்து இவ் வருடத்திற்கான சாந்தவும், 12 அங்க்கத்தவரிடமிருந்து 31.03.2017இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தாவும், 15 அங்கத்தவரிடமிருந்து 30.06.2018இல் முடிவடையும் காலாண்டுக்கான சந்தாவும் கிடைக்கப்பெற்றுள்ளது.
- 2017.04.01இல் ரூபா 300 000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. நன்கொடையானது 4 வருடங்களுக்கு வருமானமாக இனங்காணப்பட வேண்டியதுடன், விளையாட்டு உபகரணத்தின் பயன்தரு ஆயட்காலம் 5 வருடங்களாக மதிப்பிடப்பட்டது.
- இவ் வருடத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட தொழிற்பாட்டுச் செலவுகள் ரூபா 30 000 ஆகும்.

40) 31.03.2018இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான மிகை அல்லது பற்றாக்குறை எவ்வளவு? ……..

41) 31.03.2018இல் உழைக்கப்படாத வருமானங்கள் எவ்வளவு? ………………..

42) பங்குடமை ஒன்றின் இலாப நட்டங்களை சீனு, தேனு ஆகியோர் முறையே 2:1 என்ற விகிதத்தில் பங்கு கொண்டிருந்தனர். 01.04.2018இல் தனு என்பவரை இலாப நட்டத்தில் $^1/_5$ பங்குடன் புதிய பங்காளராக இணைத்துக்கொண்டனர். இத் திகதியில் தனுவின் நன்மதிப்பு பங்காக ரூபா 60 000 மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கிக் கொள்ளப்பட்டது.

1) சீனு, தேனு, தனு ஆகியோரின் புதிய இலாப நட்ட பங்கீட்டு விகிதம் யாது ? ……………….
2) நன்மதிப்புத் தொகையினை சீராக்கிக் கொள்வதற்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினை எழுதுக.

பொது நாட்குறிப்பேடு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ………………………………………………………… | ………….. | …………….. |
| ………………………………………………………… | …………. | ……………. |
| ………………………………………………………… | ………….. | …………….. |
| ………………………………………………………… | …………… | …………….. |

**பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 43, 44ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

வரையறுக்கப்பட்ட சுப்பிரி வாசனா கம்பனி 01.04.2017இல் பங்கொன்று ரூபா 20 விலையான பங்குகளை வழங்கி ரூபா 10 000 000 கூறப்பட்ட மூலதனத்தினைக் கொண்டிருந்தது. 01.10.2017இல் ஒவ்வொரு 5 பங்கிற்கும் ஒரு பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 25 விலையில் உரிமை பங்குகளை வழங்கியது. 31.03.2018இல் வைத்திருக்கப்பட்ட ஒவ்வொரு 5 பங்கிற்கும் ஒரு பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 20 விலையில் வழங்கப்பட்டு நிறுத்தி வைத்த இலாபங்கள் மூலதனமாக்கப்பட்டன. இப் பங்கு வழங்கல்கள் தொடர்பாக ரூபா 50 000 செலவொன்று ஏற்பட்டுள்ளது.

43) பின்வருவனவற்றுக்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை)

**பொது நாட்குறிப்பேடு**

| திகதி | விபரம் | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| …..... | உரிமைப் பங்கு வழங்கல் | | |
| | ………………………………………………………………… | ………….. | …………….. |
| | ………………………………………………………………… | …………. | ……………. |
| …….. | நிறுத்தி வைத்த இலாபங்களை மூலதனமாக்கல் | ………….. | …………….. |
| | ……………………………………………………………… | | |
| | ……………………………………………………………… | …………… | ……………... |

44) பின்வருவனவற்றைக் காண்க.

1) 31.03.2018 இல் உள்ளவாறு கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் பெறுமதி ? …………………….
2) 31.03.2018 இல் மொத்த உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் என்ன? ……………………..

45) வரையறுக்கப்பட்ட அமீன் பொதுக் கம்பனியின் 31.03.2018இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் வருமாறு

| | 31.03.2018இல் | 01.04.2017இல் |
|---|---|---|
| | ரூ 000 | ரூ. 000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 4 500 | 3 200 |
| காசு, காசுக்கு சமனானவை | (1 200) | 800 |

- இவ் வருடத்தில் இடைக்காலப் பங்கு இலாபக் கொடுப்பனவு ரூபா 500 000 ஆகும்.
- இவ் வருடத்திற்கு மதிப்பிடப்பட்ட வருமான வரி ரூபா 600000 இத் தொகையில் ரூபா 300000 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.
- இவ் வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 200000 உம், காசு காசுக்கு சமனானவை மற்றும் வருமான வரிப் பொறுப்புத் தவிர்ந்த தொழில்படு மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 400000 ஆகும்.

பின்வருவனவற்றைக் காண்க.

1) வருமான வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் ? ……………………………….
2) நிதியீட்ட, முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்? …………………….

46) பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றின் 31.03.2018இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| | ரூபா 000 |
|---|---|
| விற்பனைகள் | 600 000 |
| விற்பனைக் கிரயம் | 300 000 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் (வட்டி தவிர்ந்தது) | 120 000 |
| வட்டிச் செலவு | 30 000 |
| வருமானவரிச் செலவு | 60 000 |
| மொத்தச் சொத்துக்கள் | 1200 000 |

பின்வரும் கணக்கீட்டு விகிதங்களைக் கணிப்பிடுக.

1) தேறிய இலாப வீதம் :……………………….. 2) வட்டிக் காப்பு விகிதம் :………………..

47) பின்வரும் ஆவணங்களை அனுபுபவர், பெறுபவர், நோக்கம் என்பற்றைக் குறிப்பிடுக.

| ஆவணங்கள் | அனுப்புவர் | பெறுபவர் | நோக்கம் |
|---|---|---|---|
| பொருள் வேண்டுகோள் பத்திரம் | | | |
| கொள்வனவுக் கட்டளை | | | |
| பொருள் ஒப்படைப்புப் பத்திரம் | | | |
| பொருள் பெறுகைப் பத்திரம் | | | |

48) பின்வரும் களஞ்சியப் பேட்டில் காணப்படும் இடைவெளிகளுக்கு பொருத்தமான தொகைகளை இடுக (பொருள் விநியோகம் FIFO முறையில் மேற்கொள்ளப்படுகின்றது)

| திகதி | பெறுவனவு | | விநியோகம் | | இருப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| 2019.01.01 | | | | | 1000 | 12000 |
| 2019.01.05 | 2000 | 26000 | | | 3000 | 38000 |
| 2019.01.10 | | | 1500 | …………. | ……….. | ……….. |
| 2019.01.15 | 2000 | 30000 | | | …………. | ………….. |
| 2019.01.22 | | | 2000 | …………. | ………… | ………….. |
| 2019.01.25 | 2000 | 28000 | | | ………….. | …………. |

49) பின்வருவன மூலப்பொருள் ஒன்று தொடர்பான தகவல்கள் ஆகும்.

- பொருளாதாரக் கட்டளைக் கணியம் 3000 அலகுகள்
- உயர் இருப்புப் பாவனை 300 அலகுகள்
- இழிவு இருப்புப் பாவனை 200 அலகுகள்
- சராசரிக் கட்டளைக் காலம் 20 நாட்கள்
- இழிவுக் கட்டளைக் காலம் 10 நாட்கள்

பின்வருவனவற்றைக் காண்க.

1) உயர் இருப்பு மட்டம் : ……………… 2) இழிவு இருப்பு மட்டம் : ………………

50) பொருளாதாரக் கட்டளைக் கணியத்தினை கணிப்பிடுவது தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

அ). பொருளாதாரக் கட்டளைக் கணியத்தினைத் திர்மானிக்கும் 2 காரணிகளளை எழுதுக?

1. ……………………………………………………………………………………..

2. ……………………………………………………………………………………..

ஆ). பொருளாதாரக் கட்டளைக் கணியத்தினைக் கணிப்பிடுவதற்கான கருதுகோள்கள் 2 எழுதுக?

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

**தரம் 13 (2019)** **கணக்கீடு 33-T-11** **மூன்று மணித்தியாலம்**

- **முதலாம் இரண்டாம்** வினா உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**01.** சுந்தர் PLC இன் 31.03.2018 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு.

| விபரம் | வரவு "000" | செலவு "000" |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 51 300 | |
| கொள்வனவுகள் | 38 800 | |
| வியாபார வருமதிகள் | 24 500 | |
| 01.04.2017 இல் சரக்கிருப்பு | 8 900 | |
| காசும் காசிற்குச் சமனானவைகளும் | 4 260 | |
| நிர்வாக செலவுகள் | 9 150 | |
| விநியோக செலவுகள் | 9 750 | |
| செலுத்திய வருமானவரி | 1 400 | |
| குத்தகை சொத்துரிமை (மோட்டார் வாகனம்) | 2 400 | |
| விற்பனைகள் | | 83 000 |
| வியாபார கொடுக்குமதிகள் | | 16 750 |
| 01.04.2017 இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | | 650 |
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | | 30 000 |
| 01.04.2017 இல் நிலத்தின் மீதான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 4 000 |
| 01.04.2017 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 3 500 |
| சென்மதி நிர்வாகச் செலவுகள் | | 340 |
| வங்கிக்கடன் | | 10 000 |
| 01.04.2017 இல் உள்ளவாறான வரிக்கான ஏற்பாடு | | 370 |
| தரகு வருமானம் | | 250 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | | 1 600 |
| | **150 460** | **150 460** |

**மேலதிக தகவல்கள்**

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

1. சரக்கிருப்பானது மூன்று வகைகளைக் கொண்டுள்ளதுடன் 31.03.2018 இல் அவற்றின் கிரயங்களுடன் தேறிய தேறக்கூடிய பெறுமதிகளும் பின்வருமாறு.

| **வகை** | **கிரயம்(ரூபா "000")** | **தே.தே.பெ(ரூபா"000")** |
|---|---|---|
| A | 3 300 | 3 500 |
| B | 2 700 | 2 700 |
| C | 4 200 | 4 000 |
| | **10 200** | **10 200** |

2. ஊழியருக்கு சம்பளமாக செலுத்திய ரூபா 2 700 000 நிலைய நிர்வாக செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது ஊழியர் சேமலாப நிதிக்கான ஊழியரின் பங்களிப்பினை கழித்து மிகுதி செலுத்தப்பட்டது. ஊழியர் சேமலாப நிதிக்கான தொழில் கொள்வோர் மற்றும் ஊழியர்களது பங்களிப்பானது முறையே 15% மற்றும் 10% ஆகும். எனினும் நடைமுறை வருடத்திற்கான தொழில் கொள்வோர், ஊழியர்களின் சேமலாப நிதிக்கான பங்களிப்பானது இலங்கை மத்திய வங்கிக்கு இன்னமும் செலுத்தப்படாதுள்ளதுடன் கணக்குப் புத்தகங்களிலும் பதியப்படவில்லை.

3. நிர்வாக செலவுகளில் மின்சார கட்டணத்திற்காக செலுத்திய ரூபா 480 000 உள்ளடங்கும். இக்கொடுப்பனவில், 2018 மார்ச் மாதத்திற்கான ரூபா 100 000 ற்கு பதிலாக ரூபா 200 000 செலுத்தியமையும் உள்ளடங்கும்.

4. 31.03.2018 இல் உள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் பின்வருமாறு.

| **விபரம்** | **கிரயத்தில் வருடாந்த பெ.தேய்வு வீதம்** | **கிரயம் மீள்மதிப்பீட்டுத் தொகை "000"** | **திரண்ட பெறுமானத் தேய்வு "000:** | **கொண்டு செல் தொகை "000"** |
|---|---|---|---|---|
| நிலம் | - | 19 000 | - | 19 000 |
| கட்டடங்கள் | 5% | 32 000 | 8 700 | 23 300 |
| காரியாலய உபகரணம் | 10% | 14 000 | 5 000 | 9 000 |
| | | **65 000** | **13 700** | **51 300** |

5. 01.04.2017 இல் குத்தககையினடிப்படையில் மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. இம்மோட்டார் வாகனம் விநியோக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள். குத்தகை காலம் 4 வருடங்களுமாகும். ஆண்டிற்கான நிலையான குத்தகை தவணைக்கட்டணம் ரூபா 800 000 ஆகும். இவ்வாண்டிற்கான குத்தகை தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டு குத்தகை கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது தவிர வேறு பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. குத்தகை கால முடிவில் குத்தகை கொள்வனவாளருக்கு மாற்றிக் கொடுக்கப்படும். தவணைக்கட்டணங்களில் உள்ளக்கியுள்ள குத்தகை வட்டி வருமாறு.

| வருடம் | ரூபா (000) |
|---|---|
| 2017/2018 | 290 |
| 2018/2019 | 230 |
| 2019/2020 | 190 |
| 2020/2021 | 90 |

6. வியாபாரத்தின் நிலமானது 31.03.2016 இல் முதல் தடவையாக ரூபா 19 000 000 இற்கு மீள்மதிப்பு செய்யப் பட்டுள்ளது, இதனால் ஏற்பட்ட மீள்மதிப்பு மிகை பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளது. 31.03.2018 இல் இரண்டாம் தடவையாக ரூபா 13 000 000 ஆக மீளமதிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அது இதுவரை கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

7. ரூபா 2 000 000 கிரயமான காரியாலய உபகரணம் 31.03.2018 இல் ரூபா 1 200 000 இற்கு அகற்றப் பட்டுள்ளது. இவ் காரியாலய உபகரணம் ஆனது 01.10.2016 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த அகற்றலானது இதுவரை கணக்கில் இடப்படவில்லை.

8. செலுத்திய வருமான வரியானது முன்னைய வருடத்திற்காக செலுத்திய ரூபா 320 000 உம் உள்ளடக்கும். நடைமுறை வருடத்தின் இறுதி காலாண்டிற்கான வருமானவரி பொறுப்பு ரூபா 360 000 ஆகும்.

9. 31.03.2018 இல் பெறப்பட்ட வங்கிக்கடனானது 31.03.2019 இலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் ரூபா 2750 000 ஆன 5 வருடாந்த தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கடனின் வட்டி வீதமானது 12% ஆகும்.

10. இக்கம்பனியானது பொருள்களை ஒருவருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கிறது. கம்பனியானது முன்னைய வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் உத்தரவாதச் செலவுகளாக ரூபா 360 000 இனை செலுத்தியுள்ளது. இது நடைமுறை வருடத்திற்கான விநியோகக் கிரயத்துள் உள்ளடங்கப்பட்டுள்ளது. 31.03.2018 இல் உள்ளவாறான உத்தரவாதத்திற்கான ஏற்பாடானது ரூபா 720 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது,

**வேண்டப்படுவது,**

LKAS 1 (நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன் பிரசுரிப்பதற்குத் தேவையான சுந்தர் PLC இன் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட)

01. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம்/நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
02. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று.
03. 31.03.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

(20 புள்ளிகள்)

**02. அ)** சுகந்தன் என்பவரினால் நடாத்திச் செல்லப்படுகின்ற தனியுரிமை வணிகத்தின் சில்லறைச் செலவுகள் தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளும் வங்கி கணக்கின் மூலம் (காசோலை மூலம்) மேற்கொள்ளப்படுவதுடன் சகல காசுப் பெறுவனவுகளும் நேரடியாக வங்கிக் கணக்குக்கு அல்லது காசோலை மூலம் பெறப்பட்டுள்ளது.

வங்கிக் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான ஏனைய தகவல்கள் வருமாறு 2018 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்:-

| பெறுவனவுகள் | ரூபா.000 | கொடுப்பனவுகள் | ரூபா.000 |
|---|---|---|---|
| காசு விற்பனைகள் | 650 | காசுக் கொள்வனவுகள் | 240 |
| காரியாலய உபகரண விற்பனை | 210 | கடன்கொடுநர். தீனா | 220 |
| கடன்பட்டோர் - சுமன் | 420 | செலவுகளுக்கான கொடுப்பனவு | 140 |
| காசு விற்பனை | 190 | கடன்கொடுத்தோர் - சாந்தி | 240 |
| கடன்பட்டோர் - சித்து | 225 | காசுக் கொள்வனவுகள் | 210 |

2018 மார்ச் மாதத்திற்கு கிடைத்த வங்கிக் கூற்றின் பொழிப்பு (ரூபா.000)

| | | |
|---|---|---|
| தேறிய காசோலைகள், காசு வைப்பு | - | 1300 |
| வழங்கிய காசோலைக்கான கொடுப்பனவுகள் | - | 850 |
| கடன்பட்டோர் நேரடி வைப்பு | - | 150 |
| வங்கி அறவிட்ட கட்டணம் | - | 50 |
| நிலையிற் கட்டளையின் கீழ் செலுத்திய காப்புறுதி தவணைக் கட்டணம் | | 40 |
| வைப்புச் செய்யப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள் | - | 220 |

2018.03.01 இல் வணிகத்தின் வங்கி கணக்கின் மீதி ரூ 40 000 ஆக இருந்ததுடன் அது அத்திகதியில் உள்ள வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கியது.
சுமன் என்ற கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவு ரூபா 4 000 ஆக இருந்ததுடன் சாந்தி என்ற கடன் கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவு ரூபா 3 000 ஆகக் காணப்பட்டது.

**வேண்டப்படுவது.**

1. மேலே உள்ள தரவுகளின் உதவியுடன் 2018 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கினூடாக பெறுவனவு, கொடுப்பனவு, நாட்குறிப்பேடுகனை வெவ்வேறாகக் காட்டுக.
2. 2018.03.31 இல் நிறுவனத்தின் சீராக்கிய காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கு மற்றும் வங்கிக்கணக்கிணக்கக்கூற்று.

(10புள்ளிகள்)

**ஆ)** M உற்பத்திப்பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு:-

ஒரு M பொருளை உற்பத்தி செய்வதற்கு 3 அலகு S மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றது. M பொருளின் மாதாந்த உற்பத்தியானது 200 இருந்து 300 வரையான அலகுகளாகும். இப்பொருளுக்கான மாதாந்த சராரரி கேள்வி 250 அலகுகள் ஆகும். S மூலப்பொருள் தொடர்பில் ஒரு கட்டளைக்கான கட்டளைச்செலவு ரூபா 100 ஆகும். ஒரு அலகு மூலப்பொருளுக்கான பராமரிப்புச் செலவு ரூபா 0.2 ஆகும். கட்டளையொன்றிற்கான விநியோகக்காலம் 5 தொடக்கம் 7 வேலைநாட்களாகும்.

**வேண்டப்படுவது**

இம் மூலப்பொருள் தொடர்பில்

1. சிக்கனக் கட்டளைக் கணியம்
2. கட்டளைகளின் எண்ணிக்கை
3. மீள் கட்டளை மட்டம்
4. ஆகக்குறைந்த இருப்புமட்டம்
5. ஆகக்கூடிய இருப்புமட்டம்
6. சராசரி இருப்புமட்டம்

(10 புள்ளிகள்)

**03.** பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது சிவன் சில்லறை வணிகம் ஒன்றில் 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்றவை ஆகும். இது கணக்கீட்டுச் சமன்பாட்டின் ஊடாக தரப்படுகின்றது.

(ரூபா 000’).

| கோ. வா. இல. | மோட் டார் வான் | கணிணி | நடைமுறைச் சொத்துக்கள் சரக்கிருப்பு | கடன்பட்டோர் ,வருமதி | காசு | கடன்கொடுத்தோர், கொடுகுமதி | வங்கிக் கடன் | மூலதனம் | நி.வைத்த வருமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீதி | +1000 | +500 | +300 | +400 | +350 | +350 | +200 | +1500 | +500 |
| 01 | | | +200 | | | +200 | | | |
| 02 | | | -100 | +150 | | | | | +50 |
| 03 | | | | | -60 | | -50 | | -10 |
| 04 | -30 | | | | | | | | -30 |
| 05 | | | | | +80 | | | | +80 |
| 06 | | | | | -30 | -35 | | | +5 |
| 07 | | | | -3 | | | | | -3 |
| 08 | | | -10 | | | | | -10 | |
| 09 | | | -120 | | +200 | | | | +80 |
| 10 | | | -50 | | | | | | -50 |
| 11 | | -50 | | | | | | | -50 |
| 12 | | | +10 | -15 | | | | | -5 |
| 13 | | | | -20 | | -20 | | | |
| 14 | | | | | | +15 | | | -15 |
| 15 | | | | | -20 | +5 | | | -25 |

**குறிப்பு**:- மோட்டார் வான் தேறிய பெறுமதியில் பேணப்படுகின்றது அத்துடன் கணிணிக்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை

**வேண்டப்படுவது**

1. 1-10 வரையான கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குக.
2. 2019 ஜனவரி மாதத்திற்கான வருமானக்கூற்று.
3. 31.01.2019 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

**(20 புள்ளிகள்)**

**4. அ.** 01.10.2018 இல் இராகவன் வணிகத்தின் கடன்பட்டோரின் தொடக்க மீதிகளின் விபரம் பின்வருமாறு.

| **கடன்பட்டோர்** | **ரூ. 000”** |
|---|---|
| கிருபா | 2500 |
| முரளி | 300 |
| மனோ | (200) |

01.10.2018 இல் காணப்பட்ட கடன்பட்டோர் பேரேட்டு மொத்த மீதி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியிருந்தது.

2018 ஒக்டோபர் மாதத்தினுள் இடம்பெற்ற கடன்பட்டோருடனான கொடுக்கல் வாங்கல்களினதும் நிகழ்வுகளினதும் சுருக்கம் பின்வருமாறு.

ரூபா “000”

| **வாடிக்கையாளர்** | **மொத்த விற்பனைகள்** | **விற்பனைத் திரும்பல்கள்** | **காசுப்பெறுவனவு** | **அனுமதித்த கழிவு** | **பதிவழித்த கடன்** |
|---|---|---|---|---|---|
| கிருபா | 1500 | 100 | 550 | 40 | - |
| முரளி | 400 | 40 | 600 | 30 | 30 |
| மனோ | 1000 | 80 | 220 | 25 | - |
| மதி | 600 | 20 | 250 | 15 | - |
| **மொத்தம்** | **3500** | **240** | **1620** | **110** | **30** |

31.10.2018 இல் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி கடன்பட்டோர் துணைப்பேரேட்டு திரள் மீதியுடன் இணங்கவில்லை. இவ் இணக்கமின்மை பின்வரும் காரணங்களால் ஏற்பட்டதாகும்.

1. கிருபாவுக்கு அனுமதித்த கழிவு ரூ 14 000 ஆனது விற்பனைப் பேரேட்டில் உரிய நபர் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது,
2. முரளியின் கடன் ரூ 30 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவளிக்கப்பட்டது கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது,
3. துணைப்பேரெட்டுப் பட்டியலானது ரூ 25 000 குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
4. கொள்வனவுப் பேரேட்டில் மனோ கணக்கில் வரவில் இருந்த ரூ 35 000 விற்பனைப் பேரேட்டுக்கு மாற்றியமை தொடர்பில் பொதுப் பேரேட்டில் பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.
5. மதிக்கு கடன் விற்பனைகள் ரூ 600 000 துணைப் பேரேட்டினுள் அவரது ஆள்சார் கணக்கில் ரூ 660 000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது,
6. October 31 இல் மனோவின் பெயருள் கணக்கில் காணப்பட்ட ரூ 100 000 செலவு மீதியானது பட்டியலில் வரவு மீதியாகப் பதியப்பட்டது.

**வேண்டப்படுவது.**

1. மேலே கூறப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கு முன்னர் 31.10.2018 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. 31.10.2018 இல் சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை கடன்பட்டோர் துணைப்பேரேட்டு நிரல் மீதியுடன் இணக்கம் செய்யும் கூற்று.

**(10 புள்ளிகள்)**

**ஆ.** விடிவெள்ளி இளைஞர் கழகமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாகும். இக்கழகமானது உணவு விடுதியொன்றையும் நடாத்தி வருகின்றது.

- இக் கழகத்தில் 31.12.2017 இல் மொத்தமாக 620 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். இக்கழகமானது ஒரு அங்கத்தவருக்கான மாதாந்த சந்தாக் கட்டணம் ரூ. 100 அறவிடுகின்றது.
- இக் கழகத்தின் மொத்த அங்கத்தவர்களில் 20 பேர் 10 வருடங்களுக்கான சந்தாவினை ஆயுட்கால அங்கத்துவ சந்தாவாகச் செலுத்தியுள்ளனர். ஆயுட் சந்தாவில் குறித்ததொகை ஒவ்வொரு வருடமும் வருமானமாக இனங்காணப்படும்.
- 31.12.2017 மற்றும் 31.12.2016 இல் கழகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| விபரம் | 31.12.2017 | 31.12.2016 |
|---|---|---|
| நிலுவைச் சந்தா | 13 200 | 18 000 |
| முற்பணச் சந்தா | 12 000 | 9 600 |
| ஆயுட் சந்தா | 96 000 | 120 000 |
| உணவு விடுதி இருப்புக்கள் | 55 000 | 39 000 |
| உணவு விடுதி தளபாடங்கள் (கொண்டு செல் மீதி) | 64 000 | 70 000 |
| விளையாட்டு உபகரணங்கள் (கொண்டு செல் மீதி) | 100 000 | 110 000 |
| காசு மீதி | ? | 20 000 |

- நடப்பாண்டில் உணவு விடுதி விற்பனைகள் மூலம் பெற்றது ரூ 124 000 ஆகும். இவ்வருடத்தில் காசாகச் செய்யப்பட்ட செலவுகள் பின்வருமாறு.
  - உணவு மற்றும் குளிர்பான கொள்வனவுகள் ரூ 55 000
  - கட்டிட வாடகை ரூ 8 000
  - சம்பளம் ரூ 72 000
  - கழகச் செலவுகள் ரூ 12 000
  - உணவு விடுதிப்பராமரிப்புச் செலவுகள் ரூ 3 000
- நடப்பாண்டில் செலுத்தப்பட்ட வருட சம்பளங்கள் பின்வரும் இரு ஊழியர்களுக்குமானதாகும்.
  - எழுது வினைஞர் - ரூ 30 000
  - உணவு விடுதி ஊழியர் - ரூ 42 000

- கட்டிட வாடகையின் ரூ 3 000 உணவு விடுதிக்குரியதாகும்.
- நடப்பாண்டில் பெற்றுக்கொண்ட நன்கொடைகள் ரூ 140 000 ஆகும்.
- நன்கொடைகள் பெறப்படும் வருடத்தில் வருமானமாக இனங்காணப்படும்.

**வேண்டப்படுவது**

விடிவெள்ளி இளைஞர் கழகத்தினது பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

1. சந்தாக்கணக்கு
2. உணவு விடுதி வருமானக் கூற்று
3. பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு
4. வருமானச் செலவுக் கணக்கு

**(10 புள்ளிகள்)**

**5. அ.** 31.03.2018 மற்றும் 31.03.2017 இலுள்ளவாறான வரையறுத்த அமேசன் பொதுக் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றுக்கள் பின்வருமாறு

| விபரம் | 31.03.2018 இல் உள்ளவாறு (ரூபா000) | 31.03.2017 இல் உள்ளவாறு (ரூபா000) |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் - மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் | 3600 | 2400 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் - திரண்ட தேய்வு ஏற்பாடு | (700) | (400) |
| சரக்கிருப்புக்கள் | 1840 | 1040 |
| வியாபார வருமதிகள் | 800 | 1200 |
| ஐயக்கடன் ஒதுக்கம் | (320) | (160) |
| காசு | 1920 | - |
| **மொத்தச் சொத்துக்கள்** | **7140** | **4080** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 2850 | 300 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 280 | 160 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 740 | 960 |
| நீண்ட காலக் கடன்கள் | 1200 | - |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 1560 | 1440 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் | 400 | 320 |
| வருமான வரி ஏற்பாடு | 80 | 100 |
| செலுத்த வேண்டிய கடன் வட்டி | 30 | - |
| வங்கி மேலதிகப் பற்று | - | 800 |
| **மொத்தப் பொறுப்புக்களும் உரிமையாண்மையும்** | **7140** | **4080** |

**மேலதிக தகவல்கள்**

1) 31.03.2016இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் சுருக்கிய வருமானக் கூற்று பின்வருமாறு

| விபரம் | ரூபா 000 |
|---|---|
| விற்பனை | 1500 |
| விற்பனைக் கிரயம் | (600) |
| தரகு வருமானம் (வருட முடிவில் பெறவேண்டியவை எவையுமில்லை) | 80 |
| தளபாட விற்பனை மீதான ஆதாயம் (இதன் கொண்டுசெல் தொகை ரூ.400 000) | 120 |
| ஐயக் கடன்கள் | (160) |
| பெறுமானத் தேய்வு | (400) |
| கடன் வட்டி | (60) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (220) |
| வருமான வரி | (80) |
| வருடத்திற்கான இலாபம் | 180 |

2) இவ்வருடத்தில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. இவ் வருடத்தில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.

3) இவ் வருடத்தில் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 01.10.2017 இல் 3 வருட கடனொன்று பெறப்பட்டது.

4) இவ் வருடத்தில் சாதாரண பங்குகளுக்கு ரூபா 400 000 இடைக்கால பங்கு இலாபம் வழங்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :**

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி 31.03.2018இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த அமேசன் பொதுக் கம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்று.

**(15 புள்ளிகள்)**

**ஆ.** பின்வரும் தகவல்கள் மங்களேஸ் PLC தொடர்பானவை

31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது :

| **விபரம்** | **(ரூ.'000)** |
|---|---|
| விற்பனை | 6 300 |
| வருடத்துக்கான வரிக்குப் பின்னரான இலாபம் | 1 200 |
| வட்டிச் செலவுகள் | 300 |
| வருடத்துக்கான வரி | 600 |

31.03.2017 இலுள்ளவாறு :

| **மொத்தச் சொத்துக்கள்:** | **(ரூ.'000)** |
|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 3 000 |
| இருப்பு | 500 |
| வியாபார வருமதிகள் | 800 |
| காசு | 200 |
| **மொத்தப் பொறுப்புக்கள் :** | |
| வியாபார கொடுக்குமதிகள் | 500 |
| வங்கிக்கடன் (3 வருடங்களுக்குப் பின்னர் செலுத்தத்தக்கது) | 1 000 |

**மேலதிக தகவல்கள் :**

i. 31.03.2016 இல் வியாபார வருமதிகள் ரூ 600 000 ஆக இருந்தது.

ii. சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன.

**வேண்டப்படுவது :**

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்துக்கான:-

1) நடைமுறை விகிதம்.

2) கடன்பட்டோர் புரள்வு விகிதம் (சராசரி கடன்பட்டோர் அடிப்படையில்)

3) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்.

4) வட்டிக் காப்பு விகிதம்

5) சொத்துக்கள் புரள்வு விகிதம் (வருட இறுதியிலுள்ள சொத்துக்களின் அடிப்படையில்)

**(05 புள்ளிகள்)**

**06.** AP சகோதரர்கள் எனும் பங்குடைமையில் அன்பு, பண்பு பங்காளர்கள் ஆவதுடன் அவர்களது பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு

1. அன்பு, பண்பு இலாபப் பங்கீட்டு விகிதம் 3:2 ஆகும்.
2. பங்காளர்கள் தொடக்க நிலையான மூலதனத்திற்கு வருடமொன்றுக்கு 5% வட்டியைப் பெறுவர்.
3. பங்காளர்களுக்கான சம்பளங்கள் மாதமொன்றுக்கு தலா 10000 ரூபா ஆகும்.
4. பங்காளர்கள் தாம் வழங்கிய கடனுக்கு வருடாந்தம் 10% வட்டி பெற உரித்துடையவர்கள்.

மாதமொன்றுக்கு ரூபா 15000 சம்பளமாகப் பெற்றுவந்த உற்பத்தி வியாபாரத் தாபனத்தின் பொது முகாமையாளர் பாசம் 31.03.2018 இல் பங்காளராக இப் பங்குடமையில் இணைந்து கொண்டார். அவர் 200 000 ரூபா காசினையும் 150 000 ஆக மதிப்பிடப்பட்ட அவரது மோட்டார் வாகனத்தையும் வியாபாரத்தில் உள்ளடக்கினார். புதிய பங்குடைமை ஒப்பந்தம் வருமாறு:-

1. அன்பு, பண்பு, பாசம் முறையே 3:2:1
2. புதிய பங்குடைமையின் ஏனைய விடயங்கள் முன்பிருந்த ஒப்பந்தத்திற்குச் சமனாகும். 31.03.2017 இலுள்ளவாறான பங்குடைமையின் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

(ரூபா "000")

| | |
|---|---|
| மூலதனக் கணக்குகள் | |
| அன்பு | 1000 |
| பண்பு | 700 |
| நடைமுறைக் கணக்குகள் | |
| அன்பு | 200 |
| பண்பு | (140) |
| கடன் கணக்கு அன்பு | 500 |
| **இருப்புக்கள்** | |
| மூலப்பொருட்கள் | 250 |
| நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில்) | 450 |
| முடிவுப் பொருட்கள் | 550 |

**மேலதிகத் தகவல்கள்**

1. 31.03.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

(தொகை ரூ. "000")

| | |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 1200 |
| மூலப்பொருள் கொள்வனவுச் செலவுகள் | 200 |
| மூலப்பொருள் வெளித்திருப்பம் | 250 |
| நேர்க் கூலிகள் | 450 |
| நிர்வாக செலவுகள் | 720 |
| விநியோகச் செலவுகள் | 600 |
| நிதிச் செலவுகள் | 150 |
| விற்பனைகள் | 5500 |
| விற்பனைத் திருப்பங்கள் | 220 |
| உற்பத்தி மேந்தலைகள் | 600 |

2. 31.03.2018 இல் உள்ளவாறான இருப்புக்கள் (தொகை ரூ. "000")

| | |
|---|---|
| மூலப்பொருட்கள் | 450 |
| நடைமுறை வேலை (உற்பத்திக் கிரயத்தில்) | 350 |
| முடிவுப் பொருட்கள் | 750 |

3. பாசம் இணைந்து கொண்ட தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூ.300 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நன்மதிப்புக்கான சீராக்கங்கள் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. அன்புவின் கடனுக்கான வட்டியானது செலுத்தப்படல் வேண்டும்.

5. நிறுவனத்தின் பொது முகாமையாளராகப் பணியாற்றியமைக்காக பாசத்திற்கு வழங்கப்பட்ட முதல் 8 மாதங்களுக்கான சம்பளம் உற்பத்தி மேந்தலைக்குள் உள்ளடங்கியுள்ளது. மிகுதிச் சம்பளம் செலுத்தப்படவோ பதிவு செய்யப்படவோ இல்லை.

6. நடைமுறை ஆண்டுக்கான பெறுமானத் தேய்வானது ரூ.500 000 ஆகும். இது நிர்வாக மற்றும் விநியோகச் செலவுகளில் உள்ளடங்கியுள்ளது. இது தொழிற்சாலைக்கும் நிர்வாகப்பிரிவிற்குமிடையே முறையே 60%, 40% எனப் பகிரப்பட வேண்டும்.

**வேண்டப்படுவது.**

1. 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடமையின் உற்பத்திக் கிரய மற்றும் வருமானக் கூற்று. (பகிர்வு உள்ளடங்கலாக)
2. 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடமையின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகள்

**(15 புள்ளிகள்)**



The National e-Learning Portal for the General Education

**ஆ.** அருண் PLC இன் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை அசைவுக்கூற்று வருமாறு.

(ரூபா.000")

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| A | +5000 | | | | +5000 |
| B | | +2000 | | +6000 | +8000 |
| C | +4000 | | | -4000 | |
| D | | | +500 | -500 | |
| E | | | | -1500 | -1500 |

**வேண்டப்படுவது**

1. ABCDE ஆகியவற்றை விபரிக்குக.

**(05 புள்ளிகள்)**